# TREATISE ON CASTE.

# சாதிநூல்.

திருவாரூரிலெழுந்தருளியிருந்த

ஞானப்பிரகாசசுவாமிகள்

ஆரியபாஷையிலுள்ள ஆகமபுராண

இதிகாசநூல்களினாதாரங்களைக்

கொண்டு இயற்றியது.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

இஃது.

தொண்டைமண்டலம்

மயிலை.

சந்திரசேகரநாட்டாரவர்களாலும்

திருவல்லிக்கேணி

சண்முககிராமணியாரவர்களாலும்

பரிசோதித்து.

சென்னை,

கலாநிதி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

சாலி-௧௭௯௭-க்குச்சரியான பவவருஷம்.

1875.

Registered Copyright.

# அறிவிப்பு.

இப்புத்தகம் வேண்டியவர்கள், சென்னை, இராயபுரம், மன்னார்சாமிகோவில் வீதியிலிருக்கும், தொண்டைமண்டலச் சான்றோர், தருமபரிபாலன (Anglo-Vernacular School.) ஆங்கிலோவர்னாக்குலர் கல்விச்சாலையில் விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தப் புத்தகத்தின் கிரயம்.

| | ரூபா. | அணா. | பை. |
|---|---|---|---|
| பிரதியொன்றுக்கு | 0 | ௪ | 0 |
| தபாற்செலவு | 0 | ௧ | 0 |

ஒரேதடைவையில், ௧௨-பிரதிகள் வாங்குவோருக்கு, இரண்டுபிரதி இனாங்கொடுக்கப்படும்.

# PREFACE.

The *Jatinul*, a treatise on caste, professes to give a succinct view of the origin of the various caste-branches of the Tamil Country. It was written by *Gnanapragasa Swamigal* of old at the request of one *Ulaganaigan*, and was much read and studied in the Tamil Country, even long after the establishment of the Telugu Dynasty on the royal seats of the three great *Tamil Rulers.* Just about the time when the Mahometans had the right to become the ruling race of the country, caste restrictions, which from time immemorial had been the caste code of the ancients, began to be loosely observed, and works on caste, having lost their friendly support of sovereigns, seem at present to have fallen into oblivion.

Knowing the sad state to which, unfortunately, caste literature had been reduced, little men of great importance thought of squeezing matters out of their empty brains. and spreading them throughout the country with hopes of gaining a plausible footing among those who by chance work happened to form themselves into companies to discuss, in no time, subjects each of which will take a life time to comprehend even the leading features of it.

The Editors of this small treatise find it worthwhile to make the book see the light, as it forms the essence of the voluminous Sanskrit works in

volving sections treating of the origin and progress of caste—system among the Hindus, and has a tendency to reveal to the public the exact nature of those interested in establishing illusive statements on false grounds.

After carefully comparing several manuscripts collected from various quarters, the work has been got up for the press.

MADRAS, A. D. 1875. } T. T. SHUNMUGA GRAMANYAR, &c.,

# பாயிரம்.

---

"வடவேங்கடந் தென்குமரி யாயிடைத் தமிழ்கூ
று நல்லுலகத்து" என்று ஆசிரியர் தொல்காப்பியர்
கூறியபடி பரந்துகிடக்குந் தமிழ் நாட்டில் தொன்று
தொட்டுச், 'சான்றோர்' எனப்பெயர் புனைந்து வா
ழ்ந்து கொண்டிருந்த சேர சோழ பாண்டியர் அரசுபு
ரிந்த நாட்டொடங்கி வரன்முறை தப்பாதிருந்து, அப்
பால் நிகழ்ந்த சில பல வாண்டுகளாக் முறைபிறழ்ந்து
வாழ்ந்துவருஞ் சாதியார் சுருதி யுக்தி யனுபவங்கட்கு
விரோதமான வழியே சார்பிற் சார்பான நூலொன்
றமைத் ததி லம்மூவகை யரசருந் தாமெனப் புகழ்ந்
து வெளியிட் டிருக்கின்ற போலிநூல் முதலியன
பாழ்படவும், சிலவாண்டுகளாகச் சென்னை ராஜதா
னி முழுதிலும் அங்கிலேய தரும ராஜாங்கத் தவருக்
குள் ளடங்கிய பலசாதி சனத்தொகை யிவ்வளவின
வாமென வொருங்கே திரட்டிக் கண்ணுற முயன்ற
சென்சஸ் கமிட்டியார தகப்புலனை மயங்க வைத்
த சிற்றறிவினரது திறம் வெளியாகவும், எல்லாம் வல்
ல கடவுளாகு மெமது சிவபெருமான் திருவாய்மலர்ந்
தருளிய சிவாகம மிருபத்தெட்டு ளொன்றாகும் சுப்
ரபேதம், வைகானசம், வியாசர் நூல், சூதசங்கிதை
யாந் திவ்விய நூல்களை யாதாரமாகக் கொண்டு திரு
வாரூர் ஞானப்பிரகாச சுவாமிக ளருளிச்செய்த சாதி
நூலாகும் இப்பிரபந்தத்தைப் பல பிரதி ரூபங்களைக்
கொண்டு பிழையற வாராய்ந்து அச்சிடலானோம்.

இங்ஙனம்,

தொ. தி. சண்முக கிராமணியார். &c,

சாலி. களகூள-ல் நிகழும் பவ(வரு) தைமீ

# பொருளடக்கம்.


| | | பக்கம். | செய்-தொகை. |
|---|---|---|---|
| 1. | காப்பு ... ... ... | ௧ | ௨ |
| 2. | பாயிரம் ... ... ... | ௧ | ௯ |
| 3. | சுத்தசாதியுற்பவம் ... ... ... | ௩ | ௫ |
| 4. | சங்கரசாதி யுற்பவம்... ... ... | ௪ | ௧ |
| 5. | அநுலோம ருற்பத்தி... ... ... | ௪ | ௮ |
| 6. | பிரதிலோம ருற்பத்தி... ... ... | ௬ | ௭ |
| 7. | அந்தராள ருற்பத்தி... ... ... | ௭ | ௧௦ |
| 8. | களவிற் பிறந்த வநுலோம ருற்பத்தி... ... | ௯ | ௧௦ |
| 9. | களவிற்பிறந்த பிரதிலோம ருற்பத்தி ... | ௧௦ | ௧௨ |
| 10. | அநுலோமரிற் பிறந்த விராத்திய ருற்பத்தி ... | ௧௩ | ௮ |
| 11. | பிரதிலோமரிற் பிறந்த விராத்தியருற்பத்தி... | ௧௪ | ௧௩ |
| 12. | சுருதிமானிற்பிறந்த விராத்திய ருற்பத்தி ... | ௧௭ | ௩ |
| 13. | பட்டசாலிய விரும்பூதியிற் பிறந்த விராத்திய ருற்பத்தி ... ... ... | ௧௭ | ௩ |
| 14. | சைவதீக்ஷைக்குரியர் மூவரென்பது ... | ௧௮ | ௧ |
| 15. | சாதியுயர்வு முறை ... ... | ௧௮ | ௫ |
| 16. | சாதித் தாழ்வு முறை ... ... | ௨௦ | ௫ |
| 17. | வாழி ... ... ... | ௨௧ | ௧ |
| 18. | நூல்செய்தோர் பெயர் ... ... | ௨௧ | ௧ |
| 19. | அநுபந்தம் ... ... ... | ௨௩ | 0 |

உ

கடவுள் துணை.

# சாதிநூல்.

## பாயிரம்.

### விநாயகர் துதி.

காப்பு.

ஆதிவே தத்தா லயனிடத்தி லுண்டான
சாதிபேதங்களெலாஞ் சாற்றவே-நீதித்
திடவாரணங்க டினம்பரவுமுக்கட்
கடவாரணமுகனே காப்பு. (க)

### கடவுள் துதி.

நலம்பயி லுமைகண்டேத்த நாகமும்புலியும்போற்ற
நிலம்பயிலந்தகார நீங்கிடநீங்காக்கங்கை
யலம்புசெஞ்சடைகடாழ வம்பலத்தாடுமையர்
சிலம்பணிகமலம்போற்றி செப்புவன்சாதிபேதம். (உ)

### நூல்செய்தற்குக் காரணம்.

புவனியிற்கலியினீட்டம் பொருந்தலாற்சாதிபேதத்
தவரவரொழுக்கங்குன்று தாகமப்பொருளையெல்லாந்
தவநெறியுலகநாதன் றமிழினூற்றருகவென்னச்
சிவனருள்கருதியானுஞ் செப்புவன்செய்யுளாக. (க)

### முதநூல்.

வேதநால்வகைதெரிந்த வியாதனுரைத்தநூலு
மாதலினத்துடன் வைகானசமெனுநூலுஞ்சங்
கீதையுமெங்கோன் சுப்ரபேதமுமாகுமென்றே
யோதுமாகமமுங்கண்டே யுரைப்பன்யான்சாதிபேதம் (உ)

## அவையடக்கம்.

நெற்சாதிபேதம்போல நிலந்தனிற்கலந்துதோன்று
முற்சாதிபேதமெல்லா முறையுறமொழிகையாலே
சொற்சாதிபேதமுற்றுந் துணிந்திடாவெமதுசொல்லும்
நற்சாதிபேதத்துள்ளோர் நவின்றிடார்நவையீதென்றே. ௩

## நூற்பயன்.

தேசிகராதிசைவத் தியற்கையைப்பெறுகைமற்று
மோசைகொள்சிவாகமாதியுரைத்தலோடொழுக்கமெல்லா
மாசிலாதுரைத்ததா லம்மரபினர்க்கன்றியாகா
நேசமோடிவைவிளங்க நெறிபலவிளங்குமன்றே. (௪)

## சாதித்தொகை.

சாதிநால்வகையதாமச் சாதியிலனுலோமத்தின்
பேதமோரெண்வகைத்தாம் பிரதிலோமமுமோரேழாம்
ஈதலாலந்தராளரீரஞ்சாம் விராத்தியன்றான்
மூதுரையுணர்ந்தபேர்க்கு மொழியறமொழியொணாதே. ௫

## சைவபேதம்.

ஐந்தெனுஞ்சைவபேதத் தடைவினையுரைக்குங்காலை
முந்தவேயநாதிசைவர் மூர்த்தியாஞ்சதாசிவன்றான்
றந்திடவாதிசைவர் சதுர்முகன்முகத்தினூடே
வந்தணரவரேசைவ மறையவராவரன்றே. (௬)

## நாற்குலச்சைவவியற்கை.

மிகைதருமகாசைவந்தான் வேதியர்குலத்தினுக்கும்
வகைதருவணுசைவந்தான் மன்னவர்வணிகர்பாலத்
தொகையவாந்தரசைவந்தான் சூத்திரகுலத்தினுக்குந்
திகழுமிம்மூவர்சைவத் தியற்கையிற்சைவராவார். (௭)

## ஆதிசைவர்தொழில்.

நீற்றுறப்புனையுநெற்றி நீதிசேராதிசைவ
ரூற்றமாமாதிபூசை யுற்சவம்பிரதிட்டைசாந்தி
சாற்றருஞ்சிவாகமத்தின் றந்திரப்படிவழாமற்
போற்றருமகாலிங்கத்தின் பூசனைபுரிவாரன்றே. (௮)

பார்த்தையர்-மகாசைவர்தொழில்.

மாசிறீக்கையிஞலான்ற பார்த்தையர்மகாசைவத்தோர்
பூசனைபுரிவர்மெய்ம்மை புராணநூல்கருத்திஞலே
தேசிகராகிமிக்க சிவாகமங்களுமுரைத்தே
யாசின்மற்றிருவர்தாமு மான்மார்த்தபூசைசெய்வார். (௯)

பாயிரம்முற்றிற்று.

# நான்முகம்.

## சுத்தசாதியுற்பவம்.

### பிர்ம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர்.

ஆளுநான்முகன்முகத்தி லந்தணர்குலமுண்டாகத்
தோளினிலரசர்வர்க்கந் தோன்றிடத்தொடைகடம்மின்
மீளவும்வணிகர்தங்கள் மெய்க்குலமுதிப்பதூய
தாளிணைதனில்வேளாளர் சாதியுஞ்சனித்ததன்றே. (க)

### அந்தணர்தொழில்.

ஓதலேபிறர்க்குத்தாமே யோதிவித்திடுதன்மிக்க
வேதவேள்விகளியற்றல் வேட்பித்தல்வேட்டமேற்றே
யீதலீந்திடுவோர்தம்பா லேற்றிடலேற்பதாக
வாதிநான்மறையோர்செய்யு மறுதொழிலாகுமன்றே. (உ)

### அரசர்தொழில்.

உரைசெய்மாமறைகளோத லுத்தமவேள்விகாத்தல்
வரையுறக்கொடுத்தல்தங்கள் மரபியல்வழாதுசெய்தல்
தரைதனைமுறையிற்காத்தல் தநுர்வேதந்தனையியற்றல்
அரசர்தங்குலத்துக்கேற்ற வறுதொழிலாகுமன்றே (௩)

### வணிகர்தொழில்.

மகந்தனைப்புரிதன்மிக்க மறைதனைக்கேட்டலீதல்
சகந்தனிலுளமருந்துச்சரக்கொடு மணிபொன்வெள்ளி
யுகந்தவாணிபங்கள்செய்த லுழவொடுபசுக்கள்காத்த
லகந்தையில்வணிகர்தங்க ளறுதொழிலாகுமன்றே. (௪)

### வேளாளர்தொழில்.

உழவொடுபசுக்கள்காத்த லூற்றவாணிபங்கள்செய்தல்
மொழிதருமறையோராதி மூவர்க்குமனுகூலஞ்செய்
தொழிலினராதனுன்குஞ் சூத்திரத்தொழிலதாகும்
வழிமுறைமதுவைசீப்பில் வணிசர்தம்பான்மையாவார் (ரு)

சுத்தசாதியுற்பவம் முற்றிற்று.

## சங்கரசாதியுற்பவம்.

உயர்ந்தவாணிழிந்தபெண்ணோ டுறிலனுலோமமாகும்
பெயர்ந்துமாணிழிந்ததாகிற் பிரதிலோமங்கடோன்றும்
அயர்ந்திடாதிவர்சோரத்தி லந்தராளங்கடோன்றும்
வியர்ந்திவர்சங்கரத்தில் விராத்தியம்பலவுண்டாமே. (ச)

சங்கரசாதியுற்பவம் முற்றிற்று.

## அநுலோமருற்பத்தி.

### தெலுங்கவேதியர்.

பதுமைசேர்மறையோர்வேந்தர்பாவையைவேட்கவந்தோ
விதமுடனுயர்தெலுங்க வேதியராகிமிக்க [ர்
வதர்வணத்தனுர்வேதத்தோ டாயுதமறைபயின்று
மதகரிபரிதேரூர்ந்து மன்னவர்சேனைகாப்போர். (க)

### கோயிற்கணக்கர்.

ஆசுரமணமதாக வந்தணனரசர்தங்கள்
மாசிலாக்கன்னிதன்னை மணந்திடவந்தமைந்தர்
பூசனைபகவதிக்குப் புரிந்துபூணூலும்பூண்டு
காசினியரசர்கோயிற் கணக்கருமாவாரன்றே. (உ)

## பண்டிதமறையோர்.

அந்தணன்வணிகமாதை யருமணம்விதியிற்புல்க
வந்தவர்பண்டிதஞ்செய் மறையவராகிமிக்க
தந்திரமருந்தினேடு சாத்திரத்தொழிலும்பூண்டு [ர்.
முந்தியமறையோர்க்கென்றுமுறைமையாற்பிணிகடீர்ப்பா

## ஓச்சர்.

சூத்திரமாதைப்பார்ப்பான் சொன்மணம்புணரவந்தோர்
பூத்திரள்கொண்டுகாளி பூசனைபுரிவோராகி
மாத்திரைவழாதுபேரி மத்தளமியற்றுந்தாளஞ்
சாத்திரவல்லராகிச் சைவவொன்னுமோச்சராவார். (௪)

## மருத்துவர்.

கருத்துடன்வணிகர்தங்கள் கன்னியைக்கைப்பிடித்துப்
பெருத்திடுமேவ்னிபாலன் பெற்றிடவந்தமைந்தர்
திருத்தமாய்வருநோயெல்லாந் தீர்த்திடவல்லராகி
மருத்துவராகிவாழ்வார் வாகடநூலுங்கற்றே. (௫)

## கொந்தகவேளாளர்.

குலங்கிளரரசர்வேளாளன் கோதையைவேட்கவந்தோர்
இலங்கு கொந்தகவேளாளரெனுங்குலந்தன்னிலெய்தித்
துலங்கியமனுநூல்மார்க்கஞ் சோர்வறச்சேரச்சேர
நலங்கிளரரசராணை நடத்திவித்திடுவர்தாமே. (௬)

## சவளவேளாளர்.

கவளப்போர்வேழவேந்தன் காதல்வேளாளர்தங்கள்
பவளச்செவ்வாய்மடந்தை பணைமுலையணையவந்தோர்
துவளப்போர்புரிந்துவேந்தன் சொற்படிநடவாதாரை
சவளத்தால்வாட்டுகின்ற * சவளவேளாளராவார். (௭)

## சேனைக்கடையார்.

அடைவுறுவணிகன்தானு மணிந்துவேளாளர்தங்கள்
புடையுறுகொங்கைமாதைப் புணர்ந்திடவந்தமாந்தர் o
தடையறவரசிருப்பிற் ரும்பூலமுதலாயுள்ள
கடைபலபரப்புஞ்சேனைக் கடையராய்வாழ்வரன்றே. (௮)

அநுலோமருற்பத்தி முற்றிற்று.

---

* குந்தம்-சவளம்-ஓர்கருவி.— o கடைகாப்பாளராகிய உக்கிரரும் இப்படியேபிறந்ததாக சூதசங்கிதைகூறுகிறது.

## பிரதிலோமருற்பத்தி.

### சூதர்-வைகானசர்.

மண்ணினுக்கரசன்வேட்ட மறைக்குலமாதுதந்தோர்
புண்ணியவசனஞ்சொல்லும் புராணிகராவர்சூத
ரெண்ணியபிரதிலோம ரிடங்களிலாலயங்கொள்
கண்ணனையருச்சித்தாவை கானசராவரன்றே. (க)

### சாலியர்.

வேலியவரசர்சாதி மின்னினைவணிகன்வேட்டுச்
சூலியராவதற்குத் தோய்ந்திடத்தோன்றுமைந்தர்
நூலியலானவாரி னுடங்குமென்படங்கணெய்யும்
சாலியராகுஞ்சாதித் தன்மையராவரன்றே. (உ)

### சேடர்-சேணியர்.

மெய்திகழ்வணிகன்வேட்ட வேதியன்மடந்தைதந்தோர்
நெய்திடுந்தொழிலும்பூண்டு நெடியமால்கீர்த்தியெல்லா
மெய்துவைக்கானகத்தோ ரியம்பிடவினிதுகேட்குஞ்
செய்தியரரகிவாழுஞ் சேடர்சேணியர்களாவார். (ஙு)

### யாழ்ப்பாணர்.

வசையுறவணிகன்வேட்ட மறைக்குலமாதர்காதல்
நசையுறப்பெற்றமைந்தர் நரம்புறுகருவிதன்னி
லிசையுறுகாதுக்கேற்ற விறலினல்விரவுமோரே
ழிசையினையெழுப்பவல்ல யாழ்ப்பாணராவரன்றே. (ச)

### ஆயர்.

மேயவேளாளர்காம வேள்பொரவேட்கைகூர்ந்து
நேயமாய்வணிகர்சாதி நேரிழைதன்பால்வந்தோர்
ஆயராயாடுமேதி யானிரைமேய்ப்போராகித்
தூயபால்தயிர்நெய்விற்குந் தொழிலினராவரன்றே. (ரு)

### சௌண்டிகர்.

அதுலமாமரசர்சாதி யரிவையைப்பெருவேளாளன்
புதுமணம்புரியவந்த புத்திரர் * பழையராகி
முதுபனையீந்திற்றூக்கு முட்டியில்முட்டாதூறும்
மதுவினைக்காச்சிவிற்று வரும்பொருள்விரும்பிவாழ்வார். சூ

* பழையர்-கள்விற்பவர்கள், இவர்களைக் காசிகாண்டத்தில், நறைவிற்கும் வணிகர், என்று கண்டிருக்கின்றது.

### பறையர்.

மறையவர்மங்கைதன்னை மணந்தசூத்திரன்பால்வந்தோர்
குறைவினன்னகரினூறு கோலறைக்கப்புறத்தி
லுறைபவராகியூர்க்கு ளுச்சியின்முன்புக்காராய்
பறைதனைத்தோளிற்றூக்கும் பறைக்குலமாவரன்றே. (எ)

பிரதிலோமருற்பத்தி முற்றிற்று.

---

## அந்தராளருற்பத்தி.

---

### கானீனர்.

அந்தணன்றன்குலத்தி லடுத்திடுங்கன்னிதன்பாற்
றந்திடுமெல்காசைவ தந்திரமுழுதுமோதி
மந்திரமுன்னூல்தாங்கி மானிடவிலிங்கந்தன்னைக்
கந்தமால்மலராலேற்றுங் கானீனராவரன்றே (க)

### குண்டகர்-கோளகர்.

ஆளனுமிருப்பச்சோரத் தந்தணன்றன்குலத்தான்
தோளணைந்திடவேவந்து தோன்றினோர்குண்டராவர்
மீளவுந்தனதுசாதி விதவைபாற்றந்தமைந்தர்
கோளகரிவரியற்கை குறித்துடனுரைத்தல்செய்வாம். (உ)

### குண்டகர்-கோளகர்தொழில்.

அருங்காயந்தன்னின்முன்னூ லணிந்துவேதியருமாவார்
ஒருங்காயசிரார்த்தம்வேள்வி யோதலுக்குரியரல்லர்
மருங்காயதோப்புவைக்கும் வாணியர்குண்டராகும்
பெருங்காயவிலையிற்பெற்ற பெறுதிகோளகனுக்காமே.(ங)

### திண்டிமாக்கள்.

மெத்தியகாதற்றூண்ட வேதியன்றன்குலத்து
தத்தையாம்வனிதைதன்னைத் தழுவிடவந்தமைந்தர்
பத்திதுத்தியங்களாகப் படித்ததிற்பரிசுவாங்கித்
துத்தியம்பெருக்குகின்ற தொனிகொடிண்டிமர்களாவார்.

## மாவுத்தர்.

அறத்தில்வாழந்தணாள ரகற்றிடுங்குற்றங்கண்டே
புறத்திடுமாதைப்பார்ப்பான் புணர்ந்திடவந்தமைந்தர்
மறுத்துவெங்களிறுகைக்கு மாவுத்தராகிமாறுத்
திறத்தொடுகவளநல்குஞ் சீவிதம்பெற்றுவாழ்வார். (௫)

## சாமந்தர்.

வருந்திறலரசர்தங்கள் மரபினிற்கன்னிதன்னைப்
பொருந்திடுங்களவுதன்னிற் புணர்ந்திடவந்தமைந்தர்
பெருந்தகையரசருக்குப் பெண்ணிடுங்குடியுமாகி
தருந்திறற்றானைசூழுஞ் சாமந்தராகிவாழ்வார். (௬)

## அபிடேகர். *

வட்டமாமுபயகொங்கை மன்னவர்மங்கைதன்னைத்
திட்டனுமரசன்புல்குஞ் சோரத்தில்வந்தபேர்கள்
அட்டமங்கலங்கண்மன்னு மபிடேகம்புரிவதன்றி
பட்டபந்தனமும்பூண்பர் பார்த்திபனுக்கைபெற்றே. (எ)

## மல்லர்கள்.

தற்றொழிலரசர்சாதி தருமத்தையிகழ்ந்தமன்னர்
நற்றொழிலிகழாமன்னர் நாரியைப்புணரவந்தோர்
சொற்றொழில்தட்டிமுட்டித்தோள்தட்டிக்கட்டிப்பாய்ந்து
மற்றொழில்நடனங்காட்டு மல்லர்களாவரன்றே. (அ)

## கவறைகள்.

இடைந்திடுங்காதல்கூர விளமுலைவணிகர்மாதை
யடைந்திடும்வணிகன்சேரு மருங்களவதனில்வந்தோர்
மிடைந்திடுஞ்சங்கராசி மிளிர்நவமணிகளெல்லாம்
கடைந்திடுந்தொழிலும்பூண்டு கவறைகளாவரன்றே. (௯)

## பரிக்குலத்தவர்.

அரிக்குலநீலமாலை யணிபவர்களவிற்புல்குஞ்
சரிக்குலமாதுதந்தோர் தத்துபுற்கவளமாதி
கரிக்குலவரசர்க்கேற்கக் கவனமாநடாத்துகின்ற
பரிக்குலம்பாதுகாக்கும் பரிக்குலத்தவர்களாவார். (௧௦)

அந்தராளருற்பத்தி முற்றிற்று.

---

* அரசனுக்கு அபிடேகஞ்செய்வோர்.

# களவிற்பிறந்த வநுலோமருற்பத்தி.

## காணியாளரும்பார்ப்பார்.

மறையவர்மன்னர்மாதை மணந்திடுங்களவில்வந்தோர்
குறைவறுகாணியாளுங் குலம்பெருமறையோராகி
யிறைவராமன்னவர்க்கு மியம்புவார்பழமையெல்லாம்
முறையுறப்பரிதேரூர்ந்து முடிமன்னர்சேனைகாப்பார். (௧)

## காணியாளர்—அபிடேகமன்னர். *

ஆரணன்தருகுலத்தோ ரரசர்தங்கன்னிசெம்பொற்
பூரணகொங்கைபுல்கப் பொருந்திடுங்காணியாளர்
காரணமருந்துநூல்மெய்க் கணிதநூற்கற்றுணைப்பர்
சீரணியபிடேகந்தான் செயப்பெறில்வேந்துமாவார். (௨)

## கைக்கோளர்—நட்டுவர்.

செட்டியர்கன்னிதன்னைத் திருமறையாளன்புல்க
விட்டமாய்வருங்கைக்கோள ரிருங்கொடிக்கயிறுபின்னிச்
சிட்டராலயத்துக்கேற்ற திருக்கொடியாடைநெய்வார்
நட்டுவர்தாமுமாவார் நாடகத்தொழில்கள்பூண்டு. (௩)

## குயவர்.

புயமுறவந்தணாளன் புல்கவேவணிகர்மாதின்
மயலுறுகளவில்வந்தோர் ○ வனைவர்மட்கலங்களெல்லாம்
முயலுறுவேள்வியோர்க்கு முகப்பணிதானுஞ்செய்து
குயவராய்வேள்விதன்னிற் கொல்லுவார்பசுவுந்தானே. ()

## ஊர்க்கணக்கர்.

வேதியன்வணிகர்சாதி விதவைபாற்றந்தமைந்தர்
ஓதினும்வற்கந்தீர்வை யொழுக்கிவையுணக்கவல்ல
சாதியூர்க்கணக்கராகித் தரும்பெருவேள்விதன்னிற்
றீதிலாமறையாளர்க்குஞ் செய்வர்மேற்றொழிலுந்தானே;

## சுருதிமான்.

கைதவமாகவேளாங் கன்னியைமறையோன்புல்க
வெய்தினோர்சுருதிமான்க ளெனுங்குலந்தன்னிலெய்தி
மொய்திகழ்வனத்திலேனம் முயல்கலையனைத்துங்கொல்லு
செய்தியேதமதுவாழ்க்கைச் சீவனமாகிவாழ்வார். [௫

---

* அரசனால் நியமனம்பெறுவோர்.— ○ சூத சங்கிதையில், 'சேருநாவிதனென்பேரும், என்று கண்டிருக்கிறது.

### கடிகைப்புலவர்.

படிவிப்பிரர்வேளாளர்குலப்பாவைதனையேதஞ்சோரத் துடனற்றோளேப்புணர்ந்திடவே யுண்டாம்புதல்வர்நற்றமி ழால், அடியைத்தொடையைப்பாவதனை யடைவாச்சொ ல்லியவரவர்பால், கடிகைப்புலவரெனவிசையாற் கவிகள் பாடித்திரிவாரே. (எ)

### கோமுட்டி.

கறைவேல்மன்னர்வணிகர்குலக் கன்னியிடத்திற்றரும்பு தல்வர், இறையாமரசர்குலதரும மியற்றிராசவீதிதொறும் நிறையாய்விற்கும்பலபண்டம் நிறைக்குங்கடைகளுறப்பர ப்பிக், குறையாச்செட்டித்தொழில்புரியுங் கோமுட்டியெ னுங்குலமாவார். (அ)

### பொன்வாணிபர்.

நீணிலவலயங்காக்கு நிருபன்தான்வணிகர்மாதின்
பூணிழையுபயகொங்கை பொருந்திடுங்களவில்வந்தோர்
ஆணியுநிறையுங்காட்டு மாடகங்கொண்டகத்தின்
வாணிபஞ்செய்திடும்பொன் வாணிபராவரன்றே. (௯)

### பாய்வாணிபர்.

தணிவிலாமயலால்வேளான் தையலைக்களவிற்புல்கும்
வணிகர்தம்புதல்வர்புற்பாய் வாணிபராகிமிக்க
வணிபெருகோரைகீறி யனமுதலைந்தென்றோதும்
பணிபலசெய்யவல்ல பாய்த்தொழிற்புரிவரன்றே. (௧0)

களவிற்பிறந்தவநுலோமருற்பத்தி முற்றிற்று

---

## களவிற்பிறந்தபிரதிலோமருற்பத்தி.

---

### சாரதி.

கட்டியன்மறையோர்மாதை யிகல்கடல்வேந்தரின்பக்
கோட்டிகொள்களவில்வந்தோர் குரகதச்சாரதியோர்
ஓட்டியேநடத்திக்காலா லுதைத்துக்கையுறைந்தசாட்டி
காட்டியேகுரகதத்தின் கதிபலநடத்திவைப்பார். (௧)

## வலையர்.

சிலைதிகழரசர்தங்க டெரிவையைச்சோரந்தன்னில்
முலையுறவணிகன்சேர்ந்து முயங்கிடவந்தமைந்தர்
வலையராம்பேர்படைத்து வனத்தினிற்கனிகிழங்கு
விலையறவிற்றுக்கான மீதினில்வாழ்வரன்றே. (௨)

## அம்பட்டர்.

வழுவுறமன்னர்மாதை வணிகன்றான்மையலாகித்
தழுவுறவந்தமைந்தர் சாதிநூல்வகையுள்ளோர்க்கும்
தொழில்தருகத்திதிட்டித் துடைதனிற்றுடைத்துமுற்றும்
பழுதரநாபியின்கீழ் பணிசெய்யம்பட்டராவார். (௩)

## வேடுவர்.

வாட்டிவெஞ்சமரடக்கு மன்னவர்கன்னிதன்னைக்
கோட்டிகொள்வணிகன்றன்பால் கூடியகளவில்வந்தோர்
காட்டினில்வலைவளைத்துக் கலைபுலிகடம்பையேனம்
வேட்டைகளாடவல்ல வேடுவராகிவாழ்வார். (௪)

## கோவில்வண்ணார்

வாரங்கோலியந்தணன்றன்மணிமாமுலையைவணிகன்றா
ன், சோரங்கோலியணைந்திடவே தோற்றும்புதல்வர்துகில்
வெளுக்கு, மீரங்கோலியெனப்பெயரா லியல்சேர்தேவால
யந்தனக்குங், காரங்கோலிக்கலைவெளுப்பர்கலைநூல்வேத
ங்கற்றோர்க்கும். (௫)

## முச்சியர்.

இச்சையின்மறையோர்மாத ரிளமுலைவணிகராவார்
ஒச்சியமாகவண்மை யுற்றிடப்பெற்றமைந்தர்
முச்சியராகிச்செம்பொன் முழுத்தங்கத்தகடுமோச்சு
மெச்சியவன்னபேத விசித்திரப்பணிதிசெய்வார். (௬)

## உறைகாரர்.

மறையவர்மங்கைகொங்கை வணிகனுக்கணையவந்தோர்
துறைபலவல்லராகித் தொல்பலமதம்பிடித்துக்
கறையறவிழைத்துக்கூட்டிக் கல்லையுங்கருவிக்கேற்ற
வுறைகளுஞ்சமைக்கவல்ல உறைகாரராகிவாழ்வார். (௭)

## தூதர்-அத்திதாரிகள்.

வித்தகவணிகன்பார்ப்பான் விதவைபாற்றந்தமைந்தர்
சுத்தநூலோதிவேந்தர் தூதராய்மயானத்துற்றும்
அத்தனைபூசைசெய்வா ரதில்கொளாலயத்துள்வீழும்
அத்தியையெடுப்பராகி யத்திதாரிகளுமாவார். (அ)

## உப்பு-எண்ணைவாணியர்.

சொற்றிடும்வணிகன்பெண்பால் சூத்திரன்சோரந்தன்னிற்
பெற்றிடுமைந்தரண்டப் பெருதவாணியர்களாகிப்
பற்றிய * வுப்புவிற்பர் பதஞ்செய்தெள்ளாடிவிற்ப
ருற்றிடுமுச்சிக்கப்பா லூர்புகவரியராவார். (கூ)

## கூத்தாடிகள்.

பகைத்தபோரடரும்வேந்தர் பாவையைச்சூத்திரன்முன்
முகைத்தனங்களவிற்புல்க முயங்கிடவந்தமைந்தர்
மிகைத்திடுநாடகத்தில் வெகுசாரிவிதங்களெல்லாம்
தொகைப்புடன்நடத்துகின்ற துதிக்குங்கூத்தாடியாவார்.

## கழாயர்.

துட்டவெம்போர்வேளெய்ய சூத்திரன்சோரந்தன்னில்
இட்டமாமன்னர்மாதை யியைந்திடவந்தமைந்தர்
அட்டமாயகிலமேற்பாய்ந் தருங்கரணங்கள்கொண்டு
நட்டகம்பத்திலேறி நடித்திடுங்கழாயராவார். (கக)

## இளமைவண்ணார்.

ஒழுக்கமாமறைக்குலத்தி லொண்டொடியுபயகொங்கை
வழுக்குறுகளவுதன்னில் மணந்தசூத்திரன்பால்வந்தோர்
அழுக்கழகாரநீலி யாடைகள்வெளுப்போராகி
யிழுக்குறுபறையர்க்காளா யிளமைகளாவரன்றே. (கஉ)

களவிற்பிறந்த பிரதிலோமருற்பத்தி முற்றிற்று.

---

* 'பற்றியவூர்ப்புறத்து, என்பது பின்னொருபாடம்.

# அநுலோமரிற்பிறந்த விராத்தியருற்பத்தி.

———(o)———

## கோவில்நட்டுவர்-தறியாளர்.

கலைத்திறச்சவன்னன்*புல்குங் கைக்கோளன்மடந்தைத ந்தோர், மிலைத்தவெண்பிறையோன்கோமி லன்றியேவேழ் விதன்னின், மலைத்திறமுலைத்தளத்து மடந்தையர்நடனங் காட்டி, நிலைத்தறியாளராகி நெடுந்துகில்நெய்துவாழ்வார்.

## கரையார்.

உரையார்த்திடுநல்வேதியன்றன் னுயருங்குலத்திலொ ண்டொடிதன், வரையேற்றிடுபொற்கொங்கையுற வருங் கைக்கோளன்றரும்புதல்வர், திரையேற்றிடுநல்நதிகள்ப க்கல் செலவோர்தம்மையோடத்தால், கரையேற்றியதன் பயன்கவருங் கரையாராவார்கரைதுறையில். (உ)

## சிற்பர்.

மருத்துவனூர்க்கணக்க மாதினைமணக்கவந்தோர்
தரித்தமுன்னூலராகித் தக்கவேள்வியுமியற்றிப்
பெருத்திடும்தெய்வபேதப் பிரதமைதேர்கோபுராதி
திருத்தமாஞ்சிற்பநூலாற் செய்திடுஞ்சிற்பராவார். (ங)

## மரவர்.

திரந்தருமறையோர்மாதைச் சேர்ந்துகொந்தகவேளாளன்
கரந்தழுவியமெய்க்காதற் களவிலேவந்தமைந்த
ருரந்தருமரவைநாழி யுழக்கொடுமரக்காலெல்லா
மரந்தனிற்கடையவல்ல மரவராய்வனத்துள்வாழ்வார். ச

## பூவாணியர்.

பாமாலையுடன்வெட்சிபுனை பார்மன்னவர்தங்குலந்தன் னிற், றேமாலைநறுங்குழல்மாதைச் சேனைக்கடையானுற வந்தோர், மாமாலையிசைந்தரிவையரை மணப்போர்தமக் குமணஞ்செய்யும், பூமாலையினைவிலைக்குதவும்பூவாணிபரா ய்ப்புனைவாரே. (ரு)

* சவன்னன்-காணியாளப்பார்ப்பான்.

### பட்டணவர்.

ஊனைக்கடையும்வடிவாளை யுறையுட்பொருந்துங்கனை வேலை, மானைக்கடைக்கணன்மருட்டும் வணிகத்திருவின்மணிக்கொங்கை, சேனைக்கடையானுறவந்தோர் திரைவாரிதியிற்பிடித்துவரு, மீனைக்கடைகடொறும்விற்கு மிகப்பட்டணவராவாரே. (சு)

### கம்மாளர்.

செட்டாஞ்சேனைக்கடையானைச் சேர்ந்தந்தணிதான்றரும்புதல்வர், தட்டார்கொல்லருடன்கன்னார் * தச்சரொன்னும்பெயர்பெற்று, கொட்டாவெழுசுத்தியைப்பற்றிக் குறடுமுதலாம்பலபணிகள், முட்டாதம்பொன்னிரும்புமரமுதலாம்பணிதிபலசெய்வார். (எ)

### மீன்பள்ளி.

குறிதருவணிகர்தங்கள் கோதைமான்மறிகண்டாவி
மறிதரவருத்திப்புல்க வருஞ்சேனைக்கடையான்றந்தோர்
நெறிதருகுளத்திலாற்றில் நெய்படுகச்சாலூற்றால்
பறிகொடுகொழுமீன்மீளப்பறிக்கமீன் ௦ பள்ளியாவார் (அ)

அநுலோமரிற்பிறந்தவிராத்தியருற்பத்தி முற்றிற்று.

## பிரதிலோமரிற்பிறந்தவிராத்தியருற்பத்தி.

### காவற்பள்ளி.

இடையர்தாம்வணிகர்மாதை யியைந்திடவந்தமைந்தர்
மிடைதருமகழிதொட்டும் விற்றொழில்வல்லராகிப்
புடைதருமவனிமூதூர் பொருந்தியவெல்லைகாட்டில்
படைபலவியற்றுங்காவற் ௦ பள்ளிகளாரவரன்றே. (க)

---

* தச்சர்-கற்றச்சர்-மரத்தச்சர்.

௦ பள்ளிகுலம்-பள்ளர்குலம்-என்பன, ஒன்றென்பதைச் சதுரகராதி, ௩-வது தொகையகராதியில், கூறியிருப்பதாலும், தென்னாடு மேனாடுகளில், நாளதும், நிலைபெற்றிருக்கும், வழக்கத்தாலும், அறிக.

## தையற்காரர்.

மன்னவர்மயிலையாயன் மருவிடவந்தமைந்தர்
பன்னருந்தொய்யற்கான படம்பலநுறுக்கிக்கூட்டி
முன்னியதொழிலெடுத்து முறுக்கியேசரடுகோத்து
துன்னியவூசிக்கான தொழில்கொள்சிற்பியர்களாவார். உ

## குறவர்.

மன்றுடவணிகர்மாதை மருவிடவந்தமைந்தர்
குன்றுதகுன்றில்வாழுங் குன்றவராகிக்குன்றில்
பொன்றுதபொருளனைத்தும்புவிதனிற்கொணர்ந்துவிற்றே
மன்றுடமரைமானேன மடர்த்திடும்வேட்டைசெய்வார்.()

## சுண்ணும்பு-மீன்பரதவர்.

குருவுறுமலையில்வாழுங் குறவனுக்குறவுபூண்டு
வரவுறுவணிகர்தங்கண் மடக்கொடிபெற்றமைந்தர்
விரவுறுகாளவாயில் வெந்தவெண்சுண்ணத்தோடே
பரவைமீன்படுத்துவிற்கும் பரதவராவரன்றே. (சு)

## அநுலோமவண்ணர்.

தெள்ளாவினிரைகள்மேய்ப்போர் சிறந்தவந்தணர்தம் மாதை, யுள்ளாகியுருகிக்கொங்கை யுறவணைந்திடவேவந் தோர்,எள்ளாவிவ்வுலகந்தன்னிலிசைந்திடுமநுலோமற்கே வெள்ளாவிதன்னில்வைத்து வெளுத்திடும்வண்ணராவார்.

## மேலோர்வண்ணர் – நீலவண்ணர்.

சாலவந்தணிதன்கொங்கை சௌண்டிகற்கணையவந்தோர்
மேலமாதரைகள்சீலை வெளுத்திடும்வண்ணராவார்
மாலமர்சுருதிமானை வண்ணத்திமருவவந்தோர்
நீலமாஞ்சாயந்தீரும் நீலவண்ணர்களாவார். (சு)

## சுபாசர்.

கொட்டமாம்புலையன்றன்னைக் கூட்டுமந்தணிபால்வந்தோர்
கட்டவிழ்தரும்பிணத்தின் கலைதனைமகிழ்ந்துடுத்தே
இட்டவாய்க்கரிசிதன்னோ டீமத்தின்தழலினாலே
சுட்டநாயிறைச்சிதின்னும் சுபாசர்களாவரன்றே (எ)

## நக்கவாரிகள்.

புலைஞனுய்நாய்தின்போனைப் புல்கவந்தணிபால்வந்தோர்
கொலைசெயுமனிதர்க்கஞ்சிக் குறுகிடாதகலநின்றே
விலையுறவரும்பண்டங்கள் விற்றரும்பொருள்கள்வவ்வி
மலமுதலெடுக்காக்க வாரிகளாகிவாழ்வார். (அ)

## ஊத்தைப்பறையர்.

உரைதருநக்கவாரி யோதுநூல்வேதமாதர்
மரபினில்மங்கைகொங்கை மணந்திடவந்தமைந்தர்
கரைதனில்வாழுவார்போற் கடற்கொங்குவிடத்தராகச்
சுரையுடல்மிசையனைத்துந் துய்த்திடும்பறையராவார். (கூ)

## ஓட்டர்.

இட்டமாமன்னர்மாதை யியைந்தசாலியன்பால்வந்தோர்
கொட்டமேதருங்குந்தாலி கொண்டுமண்முழுதுங்கோலி
வெட்டவேவல்லராகி வெட்டியமண்ணனைத்து
மொட்டகம்போற்சுமக்குமொட்டராய்வாழ்வரன்றே (க0)

## பிரதிலோமவண்ணார்.

இப்பாரிலரசர்மாதுக் கிடமிகப்பயிலுமொட்டன்
செப்பாருமுபயகொங்கை சேர்ந்திடவந்தமைந்தர்
தப்பாமற்பிரதிலோமர் தருந்துகிற்றப்பவல்ல
கைப்பான்மைவண்ணராவார் கைதொடற்கரியரன்றே. கக

## கருவர்.

வானமாத்திரையைப்போற்று மறைக்குலமாதர்கொங்கை
யூனெகுமகிட்சிகூற வொட்டன்வந்தொட்டவந்தோர்
சோனகர்பரங்கியென்றே சொல்லிடுஞ்சாதிபேதத்
தீனர்கள்விழுப்பெறித்தற் கிசைந்திடுங்கருவராவார். (கஉ)

## சக்கிலிகள்.

நூலிணைத்தரிக்குந்தக்கோர் நுடங்கிடையிடங்கொள்கொ[ங்கை
சாலியன்றழுவவந்தோர் சக்கிலிக்குலமதாகித்
தோலினிற்றுவர்பிடித்துச் சுவடுறநறுக்கிக்கூட்டிக்
காலினிற்கிடுஞ்செருப்புக் கட்டியேவிற்பாரன்றே (கங)

பிரதிலோமரிற்பிறந்த விராத்தியருற்பத்திமுற்றிற்று.

## சுருதிமானிற்பிறந்தவிராத்தியருற்பத்தி.

### அரிப்பர்கள்.

தொடுத்தவண்ணாத்திகொங்கை சுருதிமான்களவிற்பெற்றோர், படுத்துமண்முழுதுந்தோண்டிப் பலகையிற்களைத்துவாரி, யெடுத்தபொற்சுண்ணந்தன்னை யிரதத்திற்சேர்த்துருக்கி, யடுத்தவன்கடையில்விற்கும் அரிப்பர்களாவரன்றே. (௧)

### பாமரர்.

காய்ந்துவேள்கணைகளேவக் கண்ணுறுவண்ணார்மாதைத்
தோய்ந்திடச்சுருதிமானன் சோரத்தில்வந்தமைந்தர்
வாய்ந்திடுமுன்கைசுற்றும் வலையினால்வளைத்துவீசி
பாய்ந்துமீன்குளத்திற்பற்றும் பாமரகுலத்தராவார். (௨)

### கடையர்.

சுருதியந்தண்ன்றன்மாதைச்சுருதிமான்களவில்வந்தோர், பருதிவந்தெழுகடற்குள் பருவலைவளையவீசிப், பொருதநைந்தெழுந்துவீழும் புலால்கமழ்கொழுமீனெல்லாங், கருதியேகொணர்ந்துவிற்கும் கடைபயில்கடையராவார். (௩)

சுருதிமானிற்பிறந்தவிராத்தியருற்பத்திமுற்றிற்று.

## பட்டசாலியனிரும்பூதியிற்பிறந்த விராத்தியருற்பத்தி.

### செப்புக்கன்னார்.

அம்புயமுகிழ்நற்கொங்கை யந்தணியாகந்தன்னைப்
பைம்புயமுறவணைத்தப் பட்டசாலியன்பால்வந்தோர்
வெம்புகையழலைமூட்டி வியன்குகைதனிலுருக்குஞ்
செம்பினாற்பணிதிசெய்யுஞ் செப்புக்கன்னார்களாவார். (௧)

## இருளர்.

மருளிலாமறையோர்மாதை வல்லிரும்பூதுவோன்முன்
வெருளுருகாதல்கூற வேட்டிடவந்தமைந்தர்
இருளுருவிருளராகி யிருங்கிரிச்சாரல்தன்னில்
பொருளுருநிதியங்காப்பா ரரசர்பாலேவல்பூண்டு (உ)

## கணிதர்.

அணிதல்கூர்காதல்பூண்டு சோரத்திலிரும்பையூதும்
பணிதருங்குலத்தோன்சேர்ந்த பார்ப்பினிபெற்றமைந்தர்
தணிதருங்குலத்துளோர்க்குஞ் சாதிவஞ்சகமுஞ்சாத்திக்
கணிதமுந்தமிழினூலே கணித்திடுங்கணிதராவார். (ங)

பட்டசாலியனிரும்பூதியிற்பிறந்தவிராத்திய
ருற்பத்திமுற்றிற்று.

---

## சைவதீக்ஷைக்குரியர்மூவொன்பது.

ஆசிலாவநுலோமத்தரவர் சோரத்தந்தராளர்
மாசில்சாலியரோசூத மாகதரொன்னும்பேரி
லேசிலாப்பிரதிலோமத் தென்னுமிம்மூவர்தாமும்
தேசிகனருளுஞ்சைவத் தீக்கையினுரிமைபூண்பார். (க)

சைவதீக்ஷைக்குரியர்மூவொன்பது முற்றிற்று.

---

## சாதியுயர்வுமுறை.

அந்தணன்முனையனுடையணங்கைவேட்டடங்
கவள்பயின்றகன்னியையந்தணற்குநல்கு
வந்தவழிமுறையைந்தில்வந்தமைந்தர்
மாசறுபூசுரராவார்வணிகன்றன்பால்
தந்திடுபன்தொட்டதனையந்தணற்கேநல்கத்
தலைமுறையோராறுதனில்மறையோராவார்
முந்துறுசூத்திரனணங்கைமறையோர்வேட்ட
முறையேழுதலைமுறையின்மறையோராவார். (க)

## இதுவுமது.

அருமந்தப்பூபாலர்வணிகர்தங்களணங்கதனைத்
தலைமுறையோரைந்துவேட்டுத்
தருமைந்தர்கனகமணிமௌலிசூடித்
தக்காற்பாலரெனத்தரணியாள்வார்
கருமந்தான்வழுவாதுபெருவேளாளர்
கன்னிதனைமன்னவன்றான்கருதிவேட்க
வருமைந்தர்தலைமுறையோராறுதன்னில்
மாசிலாமரபுபெருமன்னராவார். (உ)

## இதுவுமது.

மிக்கபெருவேளாளர்கன்னிதன்னை
வேட்டவணிகன்பயந்தமின்னைப்பின்னுந்
தக்கவணிகன்றனக்கேயுதவவைந்து
தலைமுறையில்வணிகரெனத்தலைவராவார்
குக்கிடத்தின்வர்க்கமுடனாட்டின்வர்க்கங்
குதிரைவர்க்கந்தானுமிந்தக்கொள்கைதன்னி
லொக்குமெனவிருபிறப்பாய்மறுபிறப்பி
லுயர்பிறப்பாயவர்துலங்கதுள்ளதாமே (ந)

## இதுவுமது.

வியந்துறுபள்ளையாட்டில்மேலுறுகொடியாடாக
வுயர்ந்துறுபொருளையெல்லாமுச்சிதமச்சகெந்தி
பயந்திடுவியாதர்பெற்றார்பராசரன்சாய்சையிவ்வா
றெய்திடுமநுலோமத்தரிசைவர்கடந்தைசெய்கை (ச)

## இதுவுமது.

விடுத்திடுகொடியாடேற விசைந்துசெம்மறியின்குட்டி,
தொடுத்தவாட்டிரண்டின்றன்மை தோற்றல்போன்மாற்றா
ர்சேனை, படுத்தருமகமுஞ்செய்யும் பரசுராமன்றனைப்போ
லடுத்ததாய்தந்தைசெய்கை யாகுவரனுலோமத்தோர் (ரு)

சாதியுயர்வுமுறை முற்றிற்று.

---

## சாதித்தாழ்வுமுறை.

உடையதற்றொழிலைநீத்தே யுயர்குலத்தந்தணாளன்
றடையறத்தனக்குக்கீழாஞ் சாதியின்றொழிலேசாரி
யடைவினில்வருமைந்தாறே ழார்தலைமுறையிலென்னுங்
கொடைதனிலரசன்செட்டி சூத்திரராவரன்றே (க)

### இதுவுமது.

வெட்டிவேலரசன்றன்கீழ் மேவியசாதித்தன்மை
யொட்டியேயினதுசெய்கை யொழிந்ததிவ்வழுந்திற்செய்
தட்டியேயஞ்சாறுன தலைமுறைதன்னினேரோ [கை
செட்டியுமாகிவேளாள் செய்கையுமாவாரன்றே. (உ)

### இதுவுமது.

வணிகர்தான்றன்குலத்தின் மாற்கத்தைமறந்துதம்மைப்
பணிதருகுலத்தோர்செய்கை பற்றியேநிற்பராகி
லணிபெறவருமைந்தான வருந்தலைமுறையோருந்தித்
தணிதருவேளான்சாதித் தன்மையராவரன்றே. (ங)

### இதுவுமது.

இடருறுபோதில்யாரு மிருங்குலத்தருமநீத்தே
விடருறுதொழிலுஞ்செய்வர் விளைந்தவவ்விடர்தாநீங்கில்
தொடருறுதமதுசாதித் தொழிலலைபடாதுபின்னு
மடர்வுறப்புரிவராகி லவர்குலத்தலைவுறுரோ. (ச)

### இதுவுமது.

ஓதிலரோனுஞ்செய்கை யொழிந்திடாரொன்னிற்பார்ப்பார்
கோதிலாத்தமதுசெய்கை குன்றியேநின்றாராகில்
ஏதிலாராவரொன்றே யெடுத்துநூலியம்புமற்றோர்
சாதிகொளாசாரத்தின் றகமையாற்றலையராமே. (ரு)

சாதித்தாழ்வுமுறை முற்றிற்று.

## வாழி.

அலகிலாச்சாதிபேதத் தவர்நெறியோங்கிவாழி
பலகலையாகமங்கள் பார்தனிற்றழைத்துவாழி
திலகமாயுலகமெல்லாஞ் சிவமயமாகிவாழி
யுலகநாயகன்றன்சாதி யுலகினில்வாழிவாழி. (க)

வாழி முற்றிற்று.

## நூல்செய்தோர் பெயர்.

வேதியராதியாக விரிந்திடுமெண்பத்தொன்றாஞ்
சாதியுநூற்றுநான்கு தமிழினூற்புனைந்தசாதி
நீதியுந்தீக்கைபூண்போர் நிலைமையுந்தொகுத்தான்வேத
நாதியங்கமலைவாழு ஞானப்பிரகாசன்றானே. (க)

நூல்செய்தோர்பெயர் முற்றிற்று.

சாதிநூல் முற்றிற்று.

# APPENDIX.

## அநுபந்தம்.

☞ சாதிப்பேர்களி னீற்றில் நிற்கு மிலக்கங்கள் சாதிநூலின் செய்யுள்களைக் குறிக்கும்.

### க-வது. நால்வகை சுத்தசாதி.

### The four pure castes.

1. பிராமணர், பார்ப்பார், brahmans (க, ௨.)

2. சத்திரியர், அரசர், சான்றோர்,* the royal or military race (க, ௩.)

3. வைசியர், செட்டிகள், cultivators, merchants and herdsmen (க, ௪.)

4. சூத்திரர், வேளாளர், servile caste (க, ௫.)

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணை யியல், ௨௰-வது. சூத்திரத்தில் அரசனென்பதற்கு 'அறிவன்' எனவும்; மேற்படி அதிகாரம், கற்பியல், ௫-வது. சூத்திரத்தில், அரசர்குல மென்பதற்குச் 'சான்றோர்குலம்' எனவும்; திருக்குறள், பொருட்பால், ௭௰-வது. அதிகாரம், ௪-வது. கவியில், 'பெரியார்' என்பதற்கு 'அரசர்' எனவுரை யாசிரியர் பொருள்கூறியு மிருக்கிறார். கம்பராமாயணம், யுத்தகாண்டம், பிரமாஸ்திரப்படலம் ௨௧௧-வது. கவியில் சீதாதேவி பிறந்த மன்னர்வகுப்பைச் சான்றோர்' என்றும்; அயோத்தியாகாண்டம், தைலமாட்டுபடலம் ௪௬-வது. கவியில் ஸ்ரீராமனை 'ஆரியன்' என்றும்; மகா பாரதம், ஆரணியபருவம், நச்சுப்பொய்கைச் சருக்கம், ௪௯-வது. செய்யுளில் பஞ்சபாண்டவரைப் 'பெரியோர்' என்றும் கூறியிருக்கிறது.

ஆதலால் நூல்களில், அரசர் குலத்தவர்களுக்குக் குலத்தாலும், குணத்தாலும், கொடையாலும், புஜபலத்தாலும்

## உ-வது. நால்வகை சங்கரசாதி.

Four sorts of mixed castes.

5. அநுலோமர், mixed race of high-caste men marrying low-caste women (க.)

6. பிரதிலோமர் mixed race of low-caste men marrying high-caste women (க.)

7. அந்தராளர், mixed caste of illegitimate origin (க.)

8. விராத்தியர், mixed breed of miscellaneous character (க.)

---

## ந-வது. அநுலோமர்.

Mixed castes of high-rank.

9. தெலுங்க வேதியர், Telugu brahmans (க.)

10. கோயிற் கணக்கர், writers of higher sort (உ)

11. பண்டிதமறையோர், brahmans practising medicine &c., (ந.)

12. ஓச்சர், drummers, and temple priests (ச.)

13. மருத்துவர், வைத்தியர், doctors of medical practice (ரு.)

---

பாராளுரிமையாலும், அறிவாலும் பெரியவர், பெரியார், பெரியோர் எனவும்; அறிவுடையர் அறிவுடையார் அறிவுடையோ ரெனவும்; சான்றவர் சான்றார் சான்றோர் எனவும் பெயர்கள் வந்திருக்கின்றன. சான்றவர் சான்றார் சான்றோ ரென்னும் மூன்று பெயர்களுக்கும் பொருள் ஒன்றானமையால், நாளதும் 'சான்றார்' எனப்பெயர் பெற்றிருக்கின்ற குலத்தவர்களே பூர்வ அரசகுலத்தவர்க ளென்பதற்கு ஐயமில்லை.

14. கொந்தக வேளாளர், a tribe authorized to perform brahmanical and royal duties (கூ.)

15. சவள வேளாளர், those authorized to punish with a bearded dart (எ.)

16. சேனைக்கடையர், military bazaarmen. (அ.*)

---

## சு-வது. பிரதிலோமர்.

### Mixed castes of low-rank.

17. சூதர், புராணிகர், bards, encomiasts. } (க)†.
18. வைகானசர், கத்தா, a class of priests. }

19. சாலியர், பட்டாசாலியர், a class of weavers (உ.)

20. சேடர், a branch of the weaving class. } (ரு)
21. சேணியர், another branch of the weaving class. }

22. யாழ்ப்பாணர், minstrels (ச.)

23. ஆயர், இடையர், shepherds (ரு.)

24. பழையர், கள்விலைஞர்,‡ சௌண்டிகர், toddy-sellers (சு.)

25. பறையர், சண்டாளர், புலைஞர், pariahs of base rank (எ.)

---

*சூதசங்கிதை, சாதிவரலாறு, கசு-வது. செய்யுளில் கடைகாப்பாளராகிய உக்கிரர் இவ்விதப் பிறப்புடையோரென்று வருகின்றது. கடைகாப்பாளர் door-keepers, porters.

†சூதசங்கிதை, சாதிவரலாறு கரு-வது. கசு-வது. செய்யுள், காண்க.

‡ 'கள்வாணியர்' என்று காசிகாண்டத்தில் வருகிறது.

## ௫-வது. அந்தராளர்

### Castes of illegitimate origin.

26. கானீனர், children born during the mother's pretended maiden-hood (௧.)

27. குண்டகர், தோப்புவாணியர், children of a brahman woman by another braman while the husband is living (உ, ௩.)

28. கோளகர், பெருங்காயவாணியர், a brahman widow's illegitimate children (உ, ௩.)

29. திண்டிமாக்கள் a panegyrical class (௪.)

30. மாவுத்தர், யானைப்பாகர், elephant drivers(௫)

31. சாமந்தர், a class of captains of armies (௬.)

32. அபிடேகர் (active),
33. பட்டபந்தனர், races attending a ruler's coronation. } (௭.)

34. மல்லர்கள், pugilists (அ.)

35. கவரைகள், a class of gem merchants (௯.)

36. பரிக்குலத்தவர், a tribe engaged in breaking or training horses (௧௦.)

---

## ௬--வது. களவிற்பிறந்த வநுலோமர்.

### Anuloma class of clandestine origin.

37. காணியாளப் பார்ப்பார், சவன்னர்*, brahmans engaged in news bearing and guarding (௧.)

38. காணியாளர், a sort of doctors and astrologers.
39. அபிடேகர் (passive), a class of petty rulers. } (உ.)

---

*சூதசங்கிதை சாதிவரலாறு, ௯-வது.செய்யுள் காண்க.

40. கைக்கோளர், rope and flag makers for temples. } (௬.)
41. நட்டுவர், dancing and music masters. } (௬.)
42. குயவர், கும்பகாரர், potters. (௪*)
43. ஊர்க்கணக்கர், village writers (௫.)
44. சுருதிமான், a class of hunters (௬.)
45. கடிகைப்புலவர், a class of poets (௭.)
46. கோமுட்டி, a class of merchants (௮.)
47. பொன்வாணிபர், traders of precious metals (௯.)
48. பாய்வாணிபர், traders of mats (௧௦)

---

## ௭--வது. களவிற்பிறந்த பிரதிலோமர்.

### Prethiloma class of clandestine origin.

49. குரகதர், சாரதிகள், ரதகாரர்,† horse tamers, charioteers (௧.)
50. வலையர் (வலையம், circuit), a tribe of wild people dealing with vegetables (௨.)
51. அம்பட்டர், a higher sort of barbers (௩)
52. வேடுவர், வேடர், hunters (௪.)
53. ஈரங்கோலிவண்ணார், கோவில் வண்ணார். a particular class of washermen attached to temples (௫.)
54. முச்சியர், painters (௬.)
55. உறைகாரர், காரோடர், sheath makers (௭.)

---

*சூதசங்கிதை, சாதிவரலாறு, ௧௦-வது. செய்யுளில் 'நாவிதன்' என்னும்பேர் இவ்விதப் பிறப்பில் அடங்குவதாக வருகிறது.—நாவிதன், an inferior class of barbers.

†சூதசங்கிதை, சாதிவரலாறு, ௧௩-வது. செய்யுள் காண்க.

56. தூதர், ஒற்றர். messengers, spies.
57. அத்திதாரிகள், elephant bearers. } (௮.)

58. உப்புவாணிபர். salt sellers.
59. எண்ணெய்வாணிபர். oil mongers. } (௯)

60. கூத்தாடிகள், dancers and actors (௰.)

61. கழாயர், கழைக்கூத்தாடிகள், rope dancers (௧௧.)

62. இளமை வண்ணார், பறைவண்ணார், a base order of washermen (௧௨.)

---

## அ--வது. அநுலோம விராத்தியர்.

### Mixed breed of the Anuloma class.

63. கோவில்நட்டுவர், dancing and music masters,
64. தறியாளர், weavers attached to the temple. } (௧.)

65. கரையார், தோணியியக்குவார், boatsmen (௨.)

66. சிற்பர். mechanics, artisans (௩.)

67. மரவர், makers of wooden measures and vessels (௪.)

68. பூவாணிபர், garland sellers (௫.)

69. பட்டணவர், மீன்வாணிபர், fishmongers (௬.)

70. தட்டார். gold-smiths.
71. கொல்லர், black-smiths.
72. கன்னார், braziers.
73. கல்தச்சர், masons.
74. மரத்தச்சர், carpenters. } கம்மாளர், Smiths (௭)

75. மீன்பள்ளி, பள்ளர்,* fisher caste.

---

*இவர்களை மலையாளம், யாழ்ப்பாண தேசங்களில், 'நளப் பள்ளரென்றும், தீயப் பள்ளரென்றும்,' சொல்லுகிறார்கள்.

## கூ-வது. பிரதிலோம விராத்தியர்.

Mixed breed of the Prethiloma class.

76. காவற்பள்ளி, படையாட்சி, a class of warriors (க.)

77. நெய்யற்சிற்பியர், தையற்சிற்பியர், curtain and flag makers, and tailors (உ.)

78. குறவர், புலையர், a class of foresters and hunters (ங.)

79. சுண்ணம்புப் பரதவர், சுண்ணப்பரவர், chunnam mongers.
80. மீன்பரதவர், செம்பரவர், a tribe of fisher men. } (ச.)

81. அநுலோமவண்ணார், washermen of the Anuloma class (ரு.)

82. மேலோர்வண்ணார், பாண்டிவண்ணார், washermen serving noble-families
83. நீலவண்ணார், washermen using indigo. } (சு)

84. சுபாசர், வெட்டியரர், a class dealing with dead bodies (எ)

85. நக்கவாரிகள், தோட்டிகள், scavengers (அ.)

86. ஊத்தைப்பறையர், a class of pariahs eating dead bodies (கூ,)

87. ஒட்டர், a caste of diggers and miners.

88. பிரதிலோம வண்ணார், திண்டாவண்ணார், washermen of the Prethiloma class (கக.)

89. கருவர். those dealing with ingredients for magical preparations (கஉ.)

90. சக்கிலிகள், தோல்வினைஞர், workers in leather (கரு.)

## ௰--வது. சுருதிமான்விராத்தியர்.

Mixed-bread of the Suruthiman class.

91. அரிப்பர், அரிப்புக்காரர், sifters (க.)

92. பாமரர், வலைகாரர், a tribe of country people who use nets in chase (உ.)

93. சடையர், (சடை, low rank,) வலையர், a tribe of fishermen. (௩.)

---

## கக--வது. பட்டசாலிய னிரும்பூதி விராததியர்.

Mixed breed of Pattasali, and Irumbutti class.

94. செப்புக்கன்னர், copper-smiths (க.)
95, இருளர், a caste of mountaineers (உ.)
96. கணிதர், a class of astrologers (௩.)

---

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.